1995 மார்ச் 16]

வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க நல்ல வாய்ப்பான இடமாக இருக்கிறது. ஆகவே சங்கராபுரம் மக்கள் நலனைக் கருதி, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தை, சங்கராபுரத்தின் மையப் பகுதியான கோட்டைமேடு பகுதியில் அமைக்க அரசு முன்வருமா ? மேலும் இந்த இரண்டு அலுவலகங்களையும் இந்த ஆண்டே கட்ட அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ளது என்று சொன்னாலும், இந்த ஆண்டே கட்டுவதற்கு இந்த அரசு முன்னுக்கு வரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவதாக, எந்த இடம் என்பது குறித்து சொல்லவேண்டுமானால், வட்டாட்சியர் அலுவலகம் என்றால் அங்கே மக்கள் நிறைய வருவார்கள்.—முன்பெல்லாம் நடந்து வருவார்கள், இப்போதும் நடந்து வருகிறார்கள், பலர் வாகனங்களிலும் வருகிறார்கள்.—வாகனங்கள் வருவது, போவது, நிறுத்துவது என்றால் அதிகமான இடம் வேண்டும். முக்கியமான இடம். அதற்கு அதிகமாக இடம் வேண்டும். குறைந்தபட்சம் 5 ஏக்கர், 10 ஏக்கராவது இருக்க வேண்டும் என்று அரசு ஒரு நியதியை வைத்திருக்கிறது. அதற்கேற்றவாறு நல்ல விசாலமான இடத்தில் அதுவும் 70 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுகிறது. பெரிய கட்டிடமாகக் கட்டப்படுகிறது. அதற்கேற்ற இடமாகத் தேர்ந்தெடுத்துக் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 24, திருமதி இலதா பிரியகுமார், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

24—

கிருஷ்ணாப்பேட்டை மக்களுக்குப் பட்டா வழங்குதல்

*** 26057**—திருமதி இலதா பிரியகுமார் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் வட்டம், கிருஷ்ணாப்பேட்டை 7-வது தெருவில் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை. ஏனெனில் அவர்கள் ஆக்ரமிப்பு செய்துள்ள நிலம் இரயில்வே துறைக்குச் சொந்தமானது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி இலதா பிரியகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இரயில்வே துறைக்குச் சொந்தமானது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

திருமதி இலதா பிரியகுமார் : இந்த அரசாங்கம், சென்டரல் கவர்ன்மெண்ட்டுக்கு ரெக்கமண்ட் பண்ணி அனுப்ப முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இருப்புப் பாதை கிழக்கிந்தியக் கம்பெனி இங்கே வியாபாரம் செய்வதற்குப் பொருள்களைக் கொண்டு போவதற்காகப் போடப்பட்டது. அந்தக் காலத்தில் பல இடங்களில் சிற்றரசர்களும், ஜமீன்தார்களும் இருந்தார்கள். நிலத்தினுடைய மதிப்பு இப்போதுபோல அப்போது இல்லை. நிலத்தினுடைய தேவைகளும் இப்போதுபோல அப்போது இல்லை. ஆகையினால் பல இடங்களை, தேவைக்கு அதிகமான இடங்களை அப்போது கொடுத்தார்கள்; அவர்கள் எடுத்து வைத்துக் கொண்டார்கள். இதுபற்றி அரசு ஆய்வு செய்து எந்தெந்த இடங்களில் அவர்களுக்குத் தேவை இல்லையோ அந்த நிலத்தை திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசுக்கும் இங்கே இருக்கிற பொறுப்புள்ள அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதி இருக்கிறது. மீண்டும் மீண்டும் கடிதம் எழுதப்பட்டு இருக்கிறது. எந்தெந்த இடம் அவர்களுக்குத் தேவை இல்லையோ, அதை அரசு பெற்று அரசினுடைய பணிகளுக்கும், தேவையான இடங்களில் ஏழை எளியவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கும் அரசு எல்லாவிதமான முயற்சியையும் எடுத்துக்கொண்டு இருக்கிறது.

முற்பகல் 10-20

திருமதி இலதா பிரியகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முயற்சி எடுத்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

1995 மார்ச் 16]

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் என்பது தமிழகத்திலே இருக்கின்ற நகரங்களிலே, பெரிய நகரங்களிலே ஒன்று. அமைச்சர் அவர்கள் கிருஷ்ணாப்பேட்டையில் இருக்கின்ற நிலம் இரயில்வே இலாகாவுக்குச் சொந்தமான இடம் என்று சொன்னார்கள். ஆனால், அந்தப் பகுதியில் குடி இருக்கின்றவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள், நிலமற்றவர்கள், சொந்த நிலம் இல்லாதவர்கள், சொந்த வீடு இல்லாதவர்கள். இவற்றைக் கருத்தில் கொண்டு அரசு அந்த இடம் குறித்து இரயில்வே இலாகாவோடு பேசி — பல இடங்களில் இரயில்வே இலாகாவினுடைய நிலங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்டு இருக்கின்றது; அந்த அடிப்படையிலே—இந்த இடத்தையும் எடுத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முன்னுக்கு வந்துவிட்டது என்று முன்பே தெரிவித்துவிட்டேன். அரசு முன்வந்து விட்டது. முன்பே நான் சொல்கிறபோது, எங்கேயாவது ஆதிதிராவிட மக்கள், மலைவாழ் மக்கள் குடியிருந்தால், அவர்கள் ஆக்கிரமிப்பு செய்தாலும், அந்த நிலம் அரசுக்கு தேவைப்பட்டாலும், இன்றைக்கு இருக்கிற அரசு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்த மக்களை அப்புறப்படுத்தக் கூடாது என்று எங்களிடத்தில் கண்டிப்பாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடம் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறார்கள். அப்படி மாற்று இடம் பார்த்து எல்லோருக்கும், குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு கொடுக்கப்படும்; அவர்களுக்கு அதைக் கொடுக்கிற வரை நாங்கள் அவர்களை அகற்ற மாட்டோம். ஆனால், இந்த நிலத்தைப் பொறுத்தவரை அங்கு உள்ளவர்களை அகற்ற வேண்டும் என்று மத்திய அரசினுடைய ஆளுகையில் இருக்கின்ற இரயில்வே இலாகா நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்களை அகற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. அதுபற்றி மத்திய அரசோடும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் தொடர்புகொள்ள இந்த அரசு எண்ணிக்கொண்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் **25**, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு உணவு அமைச்சர்.